**R5299**

## AN INTERESTING QUESTION

# ஆவலைத் தூண்டும் ஒரு கேள்வி

### உரிமையின் படியல்ல, கிருபையின்படி

**கேள்வி:** கிறிஸ்துவின் மரணம் ஒவ்வொருவருக்கும் உயிர்த்தெழும் உரிமையைத் தருகிறதா?

**பதில் :** இல்லை! கிறிஸ்துவின் மரணம் அவரைத் தவிர வேறு யாருக்கும் அந்த உரிமையைத் தருவதில்லை. பிதாவனவரின் வாக்குத்தத்தத்தின்படி நமது கர்த்தரின் மரண பரியந்தமுமான விசுவாசம் அவருக்கு மேன்மையான உயிர்த்தெழுதலின் உரிமையைக் கொடுத்தது. மேன்மையான உயிர்த்தெழுதலை பெற்ற பிறகு, தேவனுடைய திட்டத்தின்படி, கீழ்ப்படிதலில் அவர் கொடுத்த பூமிக்குரிய உரிமைகளும், பூமிக்குரிய ஜீவனும் இனி அவருக்குத் தேவைப்படாது. எனினும் அவர் பூமிக்குரிய உரிமைகளை அவர் பறிமுதல் செய்யவோ, கொடுக்கவோ இல்லாமல், இன்னும் அவருடையதாக இருக்கிறது.

அது அவருக்கு தேவைப்படாது. ஏனெனில் அவர் மேன்மையான ஆவிக்குரிய சுபாவத்தை பரிசாக பெற்றிருக்கிறார். அந்த பூமிக்குரிய உரிமைகளை பிதாவானவரின் கைகளில், நீதியின் புஸ்தகத்தில் தம் கணக்கில் வைத்திருக்கிறார். நீதியின் புஸ்தகத்தில் அவரது கணக்கில் வைத்திருக்கிற பூமிக்குரிய உரிமைகளை பிதாவானவரின் ஏற்பாட்டின்படி, ஏற்ற காலத்தில் உலகத்தை வாங்குவதற்கு பயன்படுத்துவார். இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில் அவரது பலியின் புண்ணியத்தை "சகல ஜனங்களுக்காகவும்" சமர்ப்பிப்பார். அது நீதியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மனுக்குலம் முழுவதும் வந்து, இரட்சகரிடம் திருப்பப்படுவார்கள். இரட்சகர் மாபெரும் வல்லமையை எடுத்துக்கொண்டு தேவனுக்கும் மனிதருக்கும் இடையே மத்தியஸ்தராக இருந்துகொண்டு ஆயிர வருடம் அரசாளுவார். புதிய உடன்படிக்கை ஆரம்பிக்கப்பட்ட இஸ்ரயேலரின் மூலமாக இந்த மத்தியஸ்தம் மனுக்குலத்தை சென்றடையும்.

- மனுக்குலத்தின் மறுசீரமைப்பின் ஆசீர்வாதத்திற்கு இரட்சகர் தமது பூமிக்குரிய உரிமைகளை கொடுக்கக்கூடிய காலத்திற்காக காத்துக்கொண்டிருக்கும் போது, பிதாவானவர், சபையின் முதற்பேறானவர்களாக இருக்கும்படி அழைத்து இழுத்துக்கொண்டவர்களுக்கு இரட்சகர் தமது பலியின் புண்ணியத்தை பயன்படுத்தி பிதாவனவரின் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். அழைக்கப்பட்டு, கீழ்ப்படிந்து பாவத்திலிருந்து திரும்பி, தனது சரீரத்தை ஜீவனுள்ள பலியாக தேவனிடம் சமர்ப்பிக்கிற ஒவ்வொருவருக்காவும் இரட்சகர், அவனது பரிகாரியாக அவனது பலியை ஏற்புடையதாக ஆக்கும்படி தமது பலியின் புண்ணியத்தை அவனுக்கு சாட்டுகிறார். பிறகு பலியானது ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேறினவுடனே, சாட்டப்பட்ட கிறிஸ்துவின் புண்ணியமானது விடுவிக்கப்பட்டு, திருப்பப்படும். ஆகையால் யுக முடிவில் சபையானது கிறிஸ்துவின் புண்ணியத்தினால் உதவி செய்யப்பட்ட பிறகு, உண்மையான தொகை நீதியின் கரங்களில் சிதைவுறாதிருக்கும். அது முழு உலகத்தின் பாவங்களுக்கும் போதுமானதாக இருக்கும். கிறிஸ்துவின் ஆயிர வருட ஆளுகையில் ஆதாமுக்கும் அவரது சகல சந்ததிகளுக்கும் மறு சீரமைப்பின் ஆசீர்வாதத்தை கொடுக்க போதுமானதாக இருக்கும்.